<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>

<u>O.S.No.496/2021</u>

06.02.2023. வா.சா.1 திரு. கணேசன்

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-</u>

எனது அத்தை தங்கம்மாள் உயிருடன் இருந்த காலத்தில் அவரது சுய சம்பாத்தியம் மூலம் சில சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். அவ்வாறு தங்கம்மாள் சுய சம்பாத்தியம் மூலம் பெற்ற சொத்துக்களில் சிலவற்றை தான் நானும் எனது சகோதரர் மாடசாமியும் விவசாயம் செய்து வந்தோம் என்றால் சரிதான். மாடசாமி அற்புதமணியின் கணவர் என்றும், 2ம் பிரதிவாதியின் தந்தை என்றும் சொன்னால் சரிதான். தங்கம்மாள், நான், பிரதிவாதிகள் அனைவரும் காளியம்மன் கோவில் தெருவில் தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். காளியம்மன் கோவில் தெருவில் உள்ள தங்கம்மாளுக்கு சொந்தமான வீடு மற்றும் காலிமனையை 20.05.2014 ல் 2ம் பிரதிவாதி, அவரது தந்தை மாடசாமி ஆகியோருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதே தேதியில் தங்கம்மாள் எனக்கு காலிமனை, வீடு எழுதி கொடுத்துள்ளார். அதுபோல எனது சகோதரர் சுப்பையா மகன் ராமசந்திரனுக்கு தங்கம்மாள் காலிமனை, வீட்டையும் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்திற்கு பிறகு பிரதிவாதி, அவரது மகன் கிரையம் பெற்ற, கீழ் பக்கம் உள்ள வீட்டில் தான் வசித்து வந்தனர் என்றால் சரிதான். அதற்கு எதிரே உள்ள மேல வீட்டில் தங்கம்மாள் இருந்தார் என்றால் சரிதான். ஆனால் பிரதிவாதியும் அவரது மகனும் அதற்கு எதிர்த்த வீட்டில் இல்லை அதே தெருவில் வேறு வீட்டில் இருந்தார்கள். கிரையம் பெற்ற பிறகு பிரதிவாதியும் அவரது மகனும் தங்கம்மாள் வீட்டிற்கு எதிரே உள்ள வீட்டிற்கு வந்து விட்டனர். நான் அந்த வீட்டிற்கு நான்கு வீடுகள் தள்ளி குடியிருக்கிறேன். முதலில் பக்கத்து வீட்டில் இருந்தேன். தங்கம்மாள் மேல் வீட்டில் தனித்து தான் வசித்து வந்தார் என்றால் சரியல்ல. எங்கள் பராமரிப்பில் தான் இருந்தார். நாங்கள் தான் சமையல் செய்து கொடுத்து வந்தோம். எங்கள் பராமரிப்பில் தான் தங்கம்மாள் இருந்துவந்ததாக சொல்லுவது தவறு என்றும், தங்கம்மாள் எனது மற்றும் பிரதிவாதிகள்

அனைவரின் பராமரிப்பில் இருந்தார் என்றால் சரியல்ல. தபசில் சொத்தை கிரையம் பெறுவதற்கு முன்னர் தங்கம்மாள் அனுபவத்தில் இருந்தது என்பதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். ரெங்கசாமி என்பவரிடம் இருந்து தங்கம்மாள் 1993 ல் தங்கம்மாள் கிரைய ஆவணத்தை பார்த்துள்ளேன். பிரதிவாதிகள் அனுபவத்தில் சொத்து இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவர்கள் கிராம அதிகாரியிடம் இருந்து கடன் வாங்குவதற்காக வாங்கி தற்போது தாக்கல செய்துள்ளார்கள். பிரதிவாதி வங்கியில் கடன் வாங்கி பயிர் வைத்துள்ள ஆவணத்தை வழக்கில் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது வேறு சொத்திற்கு கடன் வாங்கியதாகும். அந்த பயிர் கருகி போனதால் அதற்குரிய இழப்பீடு தொகை 2ம் பிரதிவாதியின் வங்கி கணக்கில் சேர்ந்துள்ளது என்றால் அது தங்கம்மாள் பயிர் வைத்த இடம் ஆகும். பிரதிவாதிகள் மேற்பார்வை தான் பார்த்தார்கள். மேற்கண்ட விவரங்களை பிரதிவாதிகள் எதிர் வழக்குரையாக தாக்கல் செய்த பிறகு நான் தற்போது சாட்சியம் அளிக்கும் சங்கதிகளை எனது தரப்பில் பதில் எதிர் வழக்குரையாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் பயிர் செய்து அனுபவித்ததை நான் ரசாயனம் தூவி சேதப்படுத்தியதால் என் மீது பிரதிவாதிகள் புகார் கொடுத்து காவல் நிலையத்தில் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் விவசாயம் செய்யவில்லை. ஆனால் பொய் புகார் கொடுத்தார்கள். அந்த விசாரணையில் நான் வழக்கு முடியும் வரை பிரதிவாதிகள் பயிர் செய்வதற்கு இடையூறு செய்ய மாட்டேன் என காவல் நிலையத்தில் சம்மதித்து எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் அவ்வாறு நான் எழுதிக் கொடுக்கவில்லை. அந்த ஆவணங்களை காவல் நிலையத்தில் தருவதற்கு எந்த ஆட்சேபணையும் இல்லை.